**C.C. No. 160/2021** 03.10.2023

**PW**1 <u>சதீஸ் குமார்</u>

**<u>ம.சா.1 திரும்ப அழைக்கப்பட்டு எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

எதிரியிடம் கொடுத்ததாக சொல்லும் பணத்திற்கு ஆதாரமாக ஆவணங்கள் எதுவும் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருக்கிறேனா என்றால் இல்லை. நண்பர் என்ற முறையில் கடன் கொடுத்தேன். உண்மையில் எதிரிக்கு கடன் கொடுத்திருந்தால் அதற்கு ஆதாரம் நான் தாக்கல் செய்திருப்பேன் என்றாலும், கடன் கொடுத்ததாக சொல்வது பொய் என்பதால் தான் ஆதாரங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. ஆதாரங்கள் இருக்கிறது. தேவைப்பட்டால் தாக்கல் செய்கிறேன். இதன் பிறகு ஆவணங்களை தாக்கல் செய்தால் போலியாக உற்பத்தி செய்துதான் தாக்கல் செய்ய முடியும் என்றால் சரியல்ல. வழக்கு காசோலைகளில் '2" என்ற எண் வெவ்வேறாக உள்ளது என்று நான் முதன் முறை குறுக்கு விசாரணை செய்தபோது ஒப்புக்கொண்டிருக்கிறேன், எதிரியே பூர்த்தி செய்து கொடுத்திருந்தால் அவ்வாறு வித்தியாசம் இருக்காது என்றும், நானே பூர்த்தி செய்ததால்தான் வித்தியாசம் உள்ளது என்று சொன்னால் சரியல்ல. எதிரி என்னிடம் காசோலைகளை கொடுக்கும்போதே பூர்த்தி செய்யப்பட்டு இருந்தது. எதிரி என்னிடம் காசோலைகளை கொடுக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

( ஒப்பம். செல்வி. செ.ஜெயப்பிரதா, B.Sc., B.L., (Hon's))
விரைவுநீதிபதி, காரைக்குடி.